அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

– Page. NO – 441 –

மலர் 2 இதழ் 11	விக்ருதி ௵ மாசி ௴ பிப்ரவரி—மார்ச்சு—1951 ௵	விலை அணா 2½

ACC. No. 18580.



சூரபத்மன் மாயவலை நீக்க, அவன் தோன்றி,
இறந்த சேனைகளை உயிர்ப்பிக்க உபாயம் சொல்லுதல்

(காந்தபுராணச் சித்திர விளக்கம்—21)

442

பொருளடக்கம்

			பக்கம்
1.	ஆண்மைக்காரன்	(திருப்புகழ்மணி)	... 1
2.	திருக்கழுக்குன்றத்தின் மாட்சி	(இளவழகனார்)	... 3
3.	பழநியாண்டவர் மயில்விடுதூது	(T. H. விவேகானந்தம் பிள்ளை, B.A., B.T.,)	... 12
4.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 20
5.	ஆறுமுகமான பொருள்-3	(சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.,)	... 28
6.	ஸ்ரீ அருணகிரி அநுபூதி	(ஸ்ரீ வத்ஸன்)	... 31
7.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V, S. வேங்கடராமன்)	... 34
8.	The Dawn		... 37

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். நான்கு வருடச் சந்தா ரூ. 5-8-0 ஆயுள் சந்தா ரூ. 25-0-0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ. 2-0-0 அனுப்பவும். (வி. பி. இல்லை)

இவ்விரண்டாவது வருட சந்தா வருகிற பங்குனி மாதத்துடன் முடிந்துபோகிறபடியால், சித்திரை முதல் தொடர்ந்து பத்திரிகையை விரும்புவோர்கள் பங்குனி மாதம் முடிவதற்குள் சந்தா தொகையைச் செலுத்தவும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD,
MADRAS—1

Sole Distributors of :—**EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS**

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ௵ மாசி மீ பிப்ரவரி—மார்ச்சு 1951	இதழ் 11

ஆண்மைக்காரன்

(திருப்புகழ் மணி)

ஆடலைவு பட்டமரர் நாடது பிழைக்க
அமராவதி புரக்குமட **லாண்மைக் காரனும்**

(திருவேளைக்காரன் வகுப்பு)

" எதிரான
செஞ்சமரைமாயும் மாயக்கார
துங்கரண சூர சூறைக்கார
செந்திநகர் வாழும் **ஆண்மைக்கார** *பெருமாளே "*

என்று பாடினர் அருணகிரியார் திருப்புகழில். வேளைக்காரன் வகுப்பில் அமராவதி புரத்தை ரக்ஷிக்கும் ஆண்மைக்காரனென்று போற்றினர். அமரர்கள் பதி அமராவதி புரமாகும். செந்திலில் அதிபதியாய் விளங்கும் முருகனை அருள்பட மொழிந்

உரவோடு புனைதர நினைதரும் அடியரொடு
ஒன்றுக என்ற பெறவேனே.

து ஆராய்ந்து வணங்கும் தொண்டர் சிந்தையே அமராவதி—தேவேந்திரபட்டணம் என்று தேவேந்திர சங்க வகுப்பில் தீர்மானம் செய்துவிட்டார். அசுரர் குலங்களைத் தொலைத்துத் தொண்டனும் தேவேந்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தார் முருகன். ஆணவம் சூரபத்மன். ஆசாபாசக் காமகரோதாதிகள் அவன் வர்க்கங்கள் இவைகளை யழித்து ஜீவனைத்துல்யமான நிலையில் நிறுத்திவிடுவான் முருகன். அவனை வணங்கும் தொண்டர்களாகிய தேவேந்திரர்களுக்கு அசுரகுணங்களால் தீங்குவாராது அவர்களை எக்காலும் காத்து ரக்ஷிக்கும் சேவகனாய் விளங்குகின்றான். 'அண்டர் உபகார சேவற்காரன்' என்று முருகனைப் போற்றியதும் விசேஷம். ஆண்மைத்தனம் விளங்கிய சமயம் ஒன்று வந்தது. சூரபத்மாதிகளையெல்லாம் தொலைத்த. இந்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய எத்தனித்தார்கள். அப்பொழுது பட்டாபிஷேகம் முருகனுக்கே செய்யவேண்டுமென்றும் தேவர்கள் எல்லாரும் முருகனுக்கு அடிமைகளாய் குற்றேவல் செய்து அவன் சரணாரவிந்தத்தில் ஈடுபட்டு இருக்கவேண்டுமென்றும் நிச்சயித்தனர். முருகன் ஒப்ப வில்லை. தன் அடியார்களுக்கு நடக்கும் பட்டாபிஷேகம் தனக்கன்றோ. இந்திரனுககே பட்டாபிஷேகம் செய்வித்துத் தான் சேவகனாய் ரக்ஷகனாய் சைன்யத் தலைவனாய் அமர்ந்தார். தன்னை ஆண்டு வேண்டாமை பூண்டு, சேவை கொண்டு நின்ற ஆண்மைக்

சேவற்கொடி யிடங்கள் கந்தா எனும்போ
செஞ்சேவல் கொண்டு வரவேணும்.

காரத்தனத்தை முருகனிடம் மேலும் போற்றினர் தேவர்கள். இந்திரியங்களையும், தன்னையும், ஆணவத்தையும் அடக்கி ஆள்வதுதான் ஆண்மைத்தனம். இந்த ஆண்மைத்தனம் பெறவே வேளைக்காரனைப் போற்றவேண்டும். தன்னை ஆளத் தெரியாதவன் எல்லாம் ஆண்மைத்தனத்தைக் கொண்டாடுவது புலித்தோல் போர்த்த ஆடுபோல் நடிக்கலாமே அன்றி, உண்மையில் பேடியேயாவர். ஆண்மைக்காரன் இனத்தைச் சேர்ந்து அவனைப் போற்றினல் ஆண்மைக்கார ஆற்றலை அளிப்பான்.

திருக்கழுக்குன்றத்தின் மாட்சி

(இளவழகனர்)

IX நால்வர்

[தொடர்ச்சி 5–ஆம் பாகம்]

85. திருக்கழுக்குன்றம் வேதமலையே என்பதற்கு மற்ருெரு பெருஞ்சான்று, சமயாசிரியர் நால்வர் வேதமும் அது பெற்றிருப்பதாகும்.

86. சைவத்துக்குச் சமயாசிரியர் நால்வர் பாடலும் 'வேதம்' எனப்படும்; மலைத் தாழ்வரையில் வேதங்கள் தோன்றுதல் மரபு; கழுக்குன்றத் தாழ்வரையில் நால்வர் பாடலாகிய நான்கு வேதங்கள் தோன்றிய அருட் செயலை என்னென்று கூறலாம்!

பகவதிபாலா நமோநம இகபரமூலா நமோநம
பவுருஷசீலா நமோநம அருள்தாராய்.

87. நால்வர் வேதங்கள் தோன்றினமை காரணமாகவே, திருக்கழுக்குன்றம் 'வேதமலை' எனப் பெற்றது என்ப.

88. நான்கு கூறுயுள்ள மலைத் தாழ்வரையில் நால்வர் அருளும் நான்கு வேதங்கள் தோன்றுதல் எவ்வளவு பொருத்தம்!

89. நான்கு வேதங்களில் மூன்று வேதங்கள் 'வேதத்ரயீ' என்னும் வழக்குடன் வழங்குதலுண்டு. மற்றொன்று, நான்காவதாய்த் தனியே எண்ணப் பெறுவது. அதாவது, அப்பர், சுந்தரர் சம்பந்தர் என்னும் மூவர் பதிகங்களும் மூன்று வேதங்களாய்த் 'தேவாரம்' என்னும் ஓர் இனமாய் விளங்குவன. மாணிக்கவாசகர் பாடல் மட்டும் 'திருவாசகம்' என்னும் மற்றொரு வேதமாய்த் திகழ்வது. இப்பிரிப்புக்கேற்ற ஓர் அழகிய காரணம், திருக்கழுக்குன்றத்தில் நிகழ்ந்திருக்கின்றது. அப்பர் சுந்தரர் சம்பந்தர் தேவாரங்களாகிய வேதம் மூன்றும், அவர்கள் மலை வலம் வந்து வலம் முடித்த இடத்தில், மலைக் கோவில் இறைவனது திரு நோக்குக்கு எதிரே தாழ் வரையில் நின்று பாடுதலால் எழுந்தன. அந்த இடம் 'மூவர் பேட்டை' என்று இன்றும் வழங்கும். மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகமாகிய வேதம் மட்டும், அவர் மலை வலம் வரும்போது இடையில் சஞ்சீவி மலைச் சாரலில் அவருக்கெதிரில் இறைவன் திருக்கோலந் தோன்ற, அது கண்டு மெய் மறந்து பாடினமையால் எழுந்தது. திருக்கழுக்குன்றத்தில் நிகழ்ந்த

நீதல் ஒழிந்து மனது கசிந்து
உன் இணையடி என்று புகழ்வேனே.

இந் நிகழ்ச்சிகளுக்கும் மேற் குறித்த வேதப் பாகு பாட்டு விளக்கத்துக்கும் எவ்வளவு பொருத்தம் இருக்கின்றது! திருக்கழுக்குன்றம் வேதமலை என்பதற்கும் இது எவ்வளவு நல்ல இயல்பு! நான்கும் சேர்ந்து மொத்தம் நான்கு வேதம் என்று தொகுக்கப் பெற்றமை போலவே, மூவர் பேட்டையில் மூவர் கோவிலில் மணி வாசகப் பெருமானும் இடம் பெற்று நால்வர் திருக்கோவிலாகவே அது திகழ்கின்றது!

90. இக் காரணங்களால், நால்வர் பாடலாகிய தேவார திருவாசகங்கள் முழுதுமே 'வேதம்' எனப்படுமாயினும், வேதமலையில் அந் நால்வரிடந் தோன்றிய வேத வாக்குகளாகிய திருக்கழுக்குன்றப் பதிகங்கள் மட்டுங்கூட 'நால் வேதம்' எனப்படுதற்குத் தனிச் சிறப்பும் உரிமையும் உடையன என்பது தெரியப்படும்.

91. சமயாசிரியர் நால்வரும் சரியை கிரியை யோக ஞானங்களை விளக்க எழுந்த பெரியோராதலின், அவர் அருளிச் செய்த திருக்கழுக்குன்றப் பதிகங்களும் அச்சரியை, கிரியை, யோக, ஞானங்களைத் தனிச் சிறப்பாய் உணர்த்தும் பொருத்தம் அமைந்தவை.

92. நால்வர் திரு முன்னிலை திருக்கழுக்குன்றத்தில் மட்டுந் தனியாக உள்ளது. ஏனைத்திருப்பதிகளில் திருக்கோவிற் சுற்று நிலையில் இருக்கும்; அல்லது, திருக்கோவிற் பகுதிகளில் ஒரு தனிக் கோவிலாகவும் நிருவப் பெற்றிருக்கும். திருக்கழுக்குன்றத்திலும் இம் முறைப்படி திருக் கோவில் உள்ளது. ஆயினும்,

---

வளசமென வண்டு தனதனன வென்று
மருவு சரணங்கள் அருளாயோ.

நால்வர் பெருமக்கள், மலைப் பக்கலில் வந்து நின்ற இடத்திலேயே அவர் திரு முன்னிலை மட்டும் தனியாக அமைந்திருப்பது பெரிதும் உயிர்ப்புடையதாய்த் திகழ்கின்றது. இது வேறெங்கும் காணப்படாத தொன்று; திருக்கழுக்குன்றத்துக்கு மட்டும் ஒரு தனிச் சிறப்பு!

93. மலையை வேதமலை என்று மதிப்பதற்கொப்ப, அம்மலைவழுத்திய நால்வரும் மலைத் தாழ்வரையில் நின்ற இடம் நால்வர் திருக்கோவிலென மதிக்கப் பெற்று நால்வர் திரு முன்னிலையாய் நாளும் விளங்குகின்றது!

94. சமயாசிரியர், சமயத் திருக்கோவில்களைத் தம் அருட் சிறப்பால் மேன்மையாக்கியவர்கள்; சமயத் திரு மறைகளை அருளிச் செய்தவர்கள்; திருக்கழுக்குன்றைத் தம் வேத வாக்குகளால் 'வேதமலை' என்னும் மேன்மைக்கு உயர்த்தியவர்கள். அத்தகையோர் திரு முன்னிலை, மலைப் பெருமானை எதிர் நோக்கித் தாழ் வரையில் தனியாக அமைந்துள்ளது. தனியாக இங்ஙனம் எதிர் நோக்கித் திகழ்தல், அவர் வாயிலாக அவர் மறை யோதி இறைவன் திருவருளைத் தனித்திருந்து பெறுவதற்கு வாய்ப்பாயிருக்கின்றது. இச் சிறப்பு, திருக்கழுக்குன்றத்துக்கு உள்ளது.

95. இறைவன் திரு முன்னிலை கலையுச்சியில் திகழ்தலும், அடியவர் நால்வர் திரு முன்னிலை மலைத் தாழ்வரையில் திகழ்தலும், அதுவும் எதிர் நோக்கி ஈடுபட்ட நிலையில் திகழ்தலும், அங்கு செல்லும் நன் மக்களுக்

இடுகாட்டில் என்னை எரியூட்டு முன்
உன் திருதாட்கள் தம்மை புணர்வேனே.

குத் தெய்வ உணர்வை இனிதெழுப்பி அருள் வீறு பெறுவிக்கும் அருமைப்பாடுடையதாய் இருக்கின்றது.

96. நாடு முழுதும் திருக்கழுக் குன்றத்தில் ஒருங்கு திரண்டு, அத்தகைய அருள்நலம் அமைந்த நால்வர் திரு முன்னிலையில், அவர் அருளிய திருமறைகளை, வான் வெளியூடு மலையுச்சியில் திகழும் இறைவன் திருவிருக்கையை இரு கண்களாலும் கண்டு கண்டு ஈடுபட்டபடியே இசை நலம் சிறக்க உருகி உருகிப் பாடி அருட்பேறு பெற ஆ! அதுதான் எவ்வளவு தனிச் சிறப்பான இடம்!

97. திருக்கழுக்குன்றம் பாடுதலொன்றாலேயே அருள் பெறுதற்குரிய தனிச் சிறப்பான திருப்பதியுமாம். மலைவலம் முழுதும் அணியணியாகவும் தனித்தனியாகவும் அங்கங்கு தங்கியும் மலையிடங்களில் அமர்ந்தும், மலைவலத்தின் முடிவில் நால்வர் திரு முன்னிலையில் இருந்தும், அலறிக் கதறி, ஆடிப் பாடி அருளுணர்வு பெறற்கு ஏற்ற இயற்கை வெளியமைந்த திருமலை அது!

98. நூறாயிரக் கணக்கில் மக்கள் நடமாடி இசைபாடி உணர்வு பெருக்கற்குரிய தாராள இடப்பரப்பமைந்த மலைப்பாதை சூழ்ந்த அருள்மலை அது!

99. வேதமலையிற் சென்று வேதப்பாடல்களை இசைத்தவன்றே பொருத்தமாவது!

100. வேதம் உண்டான இடத்தில் அதனை உண்டாக்கிய அருள்வீறு நிலைபெற்றிருக்கும்; அங்கு சென்று

எள்ளியெனை நாவி கொள்ளை கொளு நாவில்
உய்யவொரு நீபொற் கழல்தாராய்.

அவ்வருட் பதியில் தாமும் தோய்ந்து பாடினலன்றே அந்த அருள் வீறு தம்மிடமும் பொருந்தி மெய்ப் பொருள் தெளிவித்து, ஓதுதலின் பயனையும் மக்கட்கு உண்டாக்கும் வேதப்பாடலின் பொருளும் உணர்ச்சியும் மேன்மேல் விளக்கமாகும். "எய்திய நாளில் இசையினல் ஏத்துமின்" என்னுந் திருமந்திரத் திருமொழிப்படி, திருமுறைத் திருமறையை இசையினல் இசைத்து, தோன்ருத் துணைவனுய இறைவனைத் தோன்றுந் துணைவனுய்க் காணும் பெரும்பேறு பெறுதற்கு வாய்ப்பான அருளிடமாய்த் திருக்கழுக் குன்றம் இவ்வாறு திகழ்கின்றது!

X மாணிக்கவாசகர்

101. மாணிக்க வாசகப் பெருமான் ஞானபாதம் விளக்கும் பொருட்டு எழுந்த பெரியார்; ஆதலின், அவர் ஞானி; அவர் உலகுக்கு வழங்கியது ஞானம்; அவர் முதலில் அதனைத் திருப்பெருந் துறையிற் பெற்ருர். அவர் அதனைத் தம் சென்னிமிசை இருத்திப் போற்றி வந்தார். 'ஞானம்' என்பதைத் 'திருவடி' என்று பருமையிற் கூறுவர். அடிகள் அதனை எங்கே இருத்தி வழங்கலாம் என்று எண்ணியபடியே யாத்திரை செய்துவந்தார். திருக்கழுக்குன்றத்தை வலம் வரும் போது, தாம் முன்கண்ட இறைவன் திருவுருவக் காட்சி தெரிந்தது; ஞானத்தை வழங்கும் இடம் இதுவே என்று துணிந்து, பிறர்பொருட்டு அவ்விடத்தில் இருத்தினர்.

பத்தியை எனக்கருளி முத்தியை அளிந்துவனர் பச்சைமயில் உற்று வரவேணும்.

" பூணொ ணாதோர் அன்புபூண்டு
பொருந்தி நாடொறும் போற்றவும் "

எனவும்,

" மலங்கினேன் கண்ணில் நீரை மாற்றி
மலங் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேன் இனி
மேல்விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின்சேவடிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே "

எனவும் வரும் மணிவாசகர் வாய் மொழிகளாலேயே வெளிப்படுகின்றன. இதனால் திருக்கழுக் குன்றம் ஞானம் வழங்கிய இடம், அதாவது, 'ஞானத் திருப்பதி' என்னும் சிறப்புக் குரியதாய்த் திகழ்கின்றது.

102. இதற்கு அடையாளமாக, மணிவாசகப் பெருமானுக்கு இறை திருக்கோலம் புலப்பட்ட சஞ்சீவி மலைப் பாரிசத்தில் 'திருவடிவைப்பு' இன்றுங் காணலாம். அது, திருவடித் திருமுன்னிலையாக விளங்குகின்றது.

103. திருப்பெருந்துறை, மாணிக்கவாசகர் ஞானம் பெற்ற இடம்; திருக்கழுக்குன்றம், அவர், ஞானத்தை வழங்கிய இடம். திருப்பெருந்துறையில் இறைவன் மாணிக்க வாசகர்க்கு மட்டும் ஞானம் தர, அவர் அதனைத் திருக்கழுக்குன்றத்தில் அனைத்துயிர்களும் உய்ய உலகு முழுவதற்கும் வழங்கினார். அந்த வழங்குதல் நிலையில் தோன்றியதே அவரது திருக்கழுக்

பருத்த மயில் மிசை நினைந்த பொழுதுன
பதத்து மலரிணை யருள்வாயே.

குன்றத் திருப்பதிகம்! ஆ, அதுதான் எவ்வளவு வேதச் சிறப்பு அமைந்தது!

104. மாணிக்க வாசகரது திருக்கழுக்குன்றப் பதிகத்தில் திருப்பெருந் துறையையும் திருக்கழுக்குன்றையும் அங்கங்கும் இணைத்துப் பாடும் சிறப்பு, அவர் பெற்ற குருவடிவத் திருக்கோலங்களின் தொடர்பு என்பது இனிது புலனும்.

105. மாணிக்க வாசகர் தமது திருக்கழுக்குன்றப் பதிகத்தில், திருப்பெரும் துறையில் தாம் பெற்ற பேறு தொடங்கிப் பின்னர்வீடு பெறுந் தகுதி எய்திய நிலைவரையில் தமக்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் புலப்படுத்தி, தமது வரலாற்றையே தொகுத்துக் கூறுதலும் ஓர் அழகு! இதனல் மாணிக்க வாசகரே அத் திருப்பதிகம், அத் திருப்பதிகமே மணிவாசகர் என்னும் சிறப்பு அப் பதிகத்துக்கு உண்டாகின்றது.

106. மாணிக்கவாசகர் ஞான பாதத்துக் குரியவராகலின், ஞானத்தில் சரியை முதலிய மூன்றும் பொதுவாகவும், ஞானத்தில் ஞானம் என்பது சிறப்பாகவும் விளங்கும்படி அவர் தமது திருக்கழுக்குன்றப் பதிகத்தை மிக அருமையாக அருளிச் செய்திருக்கின்றார்.

107. திருப்பெருந் துறையில் மாணிக்கவாசகர் குருதீக்கையும் ஐந்தெழுத்தருளும் பெற்றபின், திருத்தளிதோறும் அவர் பக்குவம் முதிர்ந்து கொண்டே வந்து, திருக்கழுக் குன்றத்தில் வினை முற்றும் ஒழிந்து இருவினையொப்பு உண்டாகி, முற்றிலும் தூயராய்விட்ட

வலமொன்று பரங்கிரி வந்தருள் பெருமானே
பவமின்றி கழிந்திட வந்தருள் புரிவாயே.

மையின், இன்னதென்று குறித்துக் கூற இயலாத, வேறெக்காலத்துங் காணொணாத திருக்கோலக்காட்சி அங்கே தோன்றி அவர்க்கு வீடுபேற்றுத் தகுதி வழங்கிவிட்டது. ஞானபாதத்துக் குரியவராதலின், வெளிநிலையிற் கலத்தற் பொருட்டு அவர் உடனே தில்லை செல்வாரானார். "என்வினை ஒத்தபின் கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே", "காணொணாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்னும் அவர் வாய்மொழிகளாலேயே இவ்வுண்மை பெறப்படுகின்றது. திருப்பெருந் துறையிற் குருவருள் பெற்ற நிலையிற் பாடிய சிவ புராணத்தில், "முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பேன் யான்" என்றார்; திருக்கழுக்குன்றத்தில் வினை ஓய்தலாகிய இருவினை யொப்புக் கிடைத்து விட்டமை கூறினார். திருப்பெருந்துறையைத் 'தோணி' என்றும், ஏனை இடங்களைக் 'கடல்' என்றும் புலப்படுங் குறிப்புத் தோன்ற, "பேணொணாத பெருந்துறைப் பெருந்தோணிபற்றி உகைத்தலும், காணொணாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்று திருவாய் மலர்ந்தருளுதலும் திருக்கழுக் குன்றத்தின் அருள்நிறைவுப் பெருமையை இனிது புலப்படுத்தும்.

108. ஞானத்தில் ஞானநிலை நிற்கும் மணிவாசகர் இத்தகைய முதிர்ந்த நிலை பெறுதற்குக் காரணமாய், அம் முதிர்ந்த நிலையில் வேதம் அருளப் பெறுதற்கு ஏற்றதாய் விளங்கிய திருக்கழுக்குன்றமன்றோ வேதம்

திருப்பரங் குன்ற மேவு பெருமானே
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே.

பெற்ற வேதகிரி என்னும் சிறப்புக் குரியது! இச் சிறப்பு வேறு எம்மலைக்கு உண்டு?

109. மாணிக்கவாசகர் இத் திருக்கழுக்குன்றச் சிறப்பை பெற்றபின், மேல் எங்கும் யாத்திரை செல்லாமல், நேரே தில்லை திரும்பி அமைதியில் இருந்து, பொன் னம்பலங்கூடி, வெளிநிலை எய்தினர். இப் பெருநிலையி னாலேதான் அப்பரடிகளும் திருப்பூம்புகலூரில் இறைவன் திருவடி கூடுங்கால் திருக்கழுக் குன்றத் தையும் நினையும்படி நேர்ந்தது. வீடடைவதற்குமுன் தக்கோர் ஞான நிறைவு பெருமிடம் திருக்கழுக் குன்றம் என்பது தெளிவாம்.

(தொடரும்)

பழநியாண்டவர் மயில்விடுதூது

(தை மீ தொடர்ச்சி)

T. H. விவேகானந்தம்பிள்ளை B. A. L. T.,
(இறைபணியாளர், திருவெண்காடு தேவஸ்தானம்.)

அண்டர்கோன்மயிலின் திண்டிறன் மாண்பு:—

மயிலே, உன் பெருமையை நீஅறியாய். தம் பெருமையை தாமே யறியார் சான்றோர். மண்ணிலே, விண்ணிலே, பாதாளத்திலே வாழ்கின்றவர்களில் உன் புகழை வாழ்த்தாதவர்கள் யார்? உன் தோகை விரிந்தால் உலக முழுவதற்கும் நிழல் தருமே. நீ அகவி, உன் தோகையை உதறினல், உண்டாகும் காற்றின் வேகத்தால்

**திருவளர் செந்தூர்க் கந்தப்பெருமானே
படுதுயர் கண்பார்த்து அன்புற்று அருளாயோ**

இமய மலையும் வேர் பறியும். விண்ணிலுள்ள அண்டங்கள் அத்தனையும், முட்டைபோல் உன்சிறகிற்குள் அடக்கும் ஆற்றலுளாய். ஆதிசேடனை நீ பற்றி, பதைக்க உதறிய தால், அவன் தலையிலிருந்த மணிகள் விண்ணிற் சிதறின. அவை விண் மீன் வடிவு கொண்டு, இன்னும் ஆகாயத்திலே நிற்கின்றன. ஏனெனில், அவை கீழேவந்தால் அவற்றை சோளமணிகள் என்று நீ கொத்தி உட்கொள்வாய் என்று அஞ்சியேதான். ஈசனது வில்லாகிய மேருமலையில் பூட்டியிருந்த வாசுகியாகிய நாணின் தணியை நீ பொள்ளெனக் கொத்தியதால் நாணறுந்து அவ்வில் தலைநிமிர்ந்து நிற்கின்றது உன்சிறகுக் காற்றுக்கு ஆற்றாது ஆதிசேடன் தலையை நெளிப்பதனால் பூமி அசைவதையே பூகம்பம் என்று சொல்லுவார்கள். சூரிய சந்திரர்களைத் துன்புறும் படி தொடரும் அரவங்கள் உன் பெயரைக் கூறக் கேட்ட மாத்திரத்தில், விட்டு, புற்றிற்புகும். தனது பாயான ஆதிசேடனை நீ கொத்திச் சென்றதனால் அன்றோ, திருமால் ஆலிலையிற் பள்ளிகொண்டான். ஆலால விஷத்தைக் கண்டத்துள் வைத்தருளும் கண்ணுதலார் செஞ்சடை மேலிருக்கும் துணிச்சலால், அரவங்கள் கர்வங் கொண்டு, அண்டத்தே ஏகுங் கருடனைக்கண்டு, "ஏண்டா, கருடா சுகமா" என்றழைக்குமே; ஆனால் வேக மிகு தோகையே! நீ நெடியதூரம் வரக் கண்டாலும், போகுமே வெண்டலையின் பொந்தினுளே; கருடன் நின்னாற் புடைப்புண்டு, நெக்கழுத காரணத்தால் அன்றோ, 'கலுழன்' எனப் பெயர் பெற்றான். மலரோன் வாகன மாகிய அன்னம் உன்னைக் கண்டு அஞ்சியதனால், 'அஞ்சம்' எனப் பெயர் பெற்றது

கொந்தளிக்கும் செந்திலில் தங்கும் குமரேசா
உன்தன் பதத்து இன்பம் தருவாயே.

என்றால், உன்னுடைய ஆற்றல் எவருடைய சொல்லில் அடங்கும்.

மணி நிற மயிலின் அணிநடம் புகழ்தல் :—

'வட்டவடிவாக வளைந்து நீ யாடுங்கால், உன் கட்ட ழகுக்குக் கரையாதார் யார்? நீல முகிலாகிய திரையை இறக்கி நீ நடக்கின்றஅழகு, தம் உள்ளத்தை நெகிழ்ந் தமையால் தேவர்கள் வடிக்கின்ற கண்ணீரையே உலகோர் மழைஎனக் கூறுவர். நடராசர்தான் உனக்கு நடனத்தில் ஒப்பாவார். மகளிர், உன் போல் நடமாடவிரும்பிப் பல காலமாகப் பயின்றும், அவ்வாறு ஆட வல்லமையில்லா மையால் **மெல்லியர்** என இகழப் பெற்றனர். காளிநடமாட முயன்றும், ஒருகால் எடுக்க மாட்டாமல் சபையிலே முகங்கவிழ்ந்து நின்றாள். பார்வதியும் பொன்னம் பலம் ஏறினும், தான் நடம் ஆடமாட்டாமல் இறைவன் நடத்தையே கும்பிட்டு நிற்கின்றாள் திருமகள் வீடுகள் தோறும், மாறிமாறி நடம் ஆடுதல் செய்தும், **'சேய்யாள்'** எனும் பெயரே சேர்ந்தாள். கலைமகள் உன்போல நடமாட முடியாமல் அன்னத்தைப் போல் உடல் வெளுத்தாள். உன்னுடைய நடையைப் பயின்றும், கைகூடாமையால் அரம்பை இடையிலே இளைத்துப் போனாள். முருகனை நீ தாங்கி விளங்குகின்றமேம்பாடு கண்டு, அதுபோல் ஆக வேண்டுமென்று, கடல், நாள் தோறும், காலையிலும், மாலையிலும் கதிரவனைத் தாங்கியும், உனக்கு ஒப்பு ஆகாமல் உடல் வெதுப்புற்றுப் புலம்பும். உன் சாயலை விரும்பியமாதர், அது எய்தப் பெறுமல், **பேதையர்** என்று இகழத்தான் பெற்றனர்.

தாரைவே லுந்திடும் பெருமானே

தோகைமேல் கோண்டு முன்வரவேணும்

கண்ணெழின் மயிலின் புண்ணியப் பெருமை:—

மேதைமிகு மயிலே! எந்த யோகியர் உன் போல் தவம் உடையார்? இமய மலையும், உன் உருவம் கொண்டு, தவம் இயற்றியே, சங்கரனார் பங்கில் உறையும் பேறு பெற்றாள். உன்போல் வடிவும், உன்னுடைய பெயரும், மலைகள் உடையன. (நவிரம்—மலை, மயில்) அதனால்தான் குமரன், குன்றமெல்லாங் கோயிலாக்கொண்டான். உனையன்றி, அவனுக்கு (முருகனுக்கு) இனியார், யார்? அவனுக்கு அருவிக் குன்றம்போல் யானையும், தகரும், தேரும் போன்ற வாகனங்கள் மிக்கிருந்தும், அடியார்க்கு அருள் செய, அவன் வரும் வேளையில் உன்மேல் ஏறியன்றோ கையில் வடிவேல் விளங்க வருகின்றான். "வேலும் மயிலும்" எனுஞ்சொற்கிணையான மந்திரந்தானுண்டோ? பணிவோடு முருகன் பெயரை மறந்தாலும் உன் பெயரை மறவார்கள் வாழ விரும்புவோர். அருணகிரியார் பாடிய கந்தரனுபூதியிலே "ஆடும் பரிவேல் அணிசேவலெனப் பாடும் பணியே பணியா அருள்வாய்" என்பதில், உன் மகிமைதானே முன்னர் வாய்த்துளது. அந்த அருணகிரிநாதர், உன் பெயரை ஓதியதாலன்றோ, உருவாய், அருவாய், உளதாய் இலதான, கந்தன், குருவாகிவந்து, அவருடைய மூவாசைத் தொடராறுத்துப் பின் அவருக்கு அனுபூதியருளியது. உன் பெயரை, நானுள்ளுருகி, ஓதுவதால், என் குறைக்கு நீ இரங்கி, முருகப்பெருமானிடம் நீ தூது சென்று வரல் வேண்டும்.

பணிபவர்க்கருளல் அணி மயிலியல்பு:—

அடைந்தோரை ஆதரித்தல் உன்னுடைய இயல்பன்றோ? அருணகிரிநாதருக்கு வந்த இடையூறு நீங்க,

---

செங்கண் மால் பங்கஜா னன்தொழா நந்தவேள்
செந்தில் வாழ் தம்பிரானே! வந்து நீ அன்பிலான்வாய்

அரசன் சபை முன் (பிரபுட தேவமகாராஜன்) தக்க சம யத்தில் முருகப்பெருமானைக் கொண்டுவந்து புகழ்படைத்த தாளாளன் நீயன்றோ? "கொண்டு வா இங்கு, குமாரகம்-பிரனை" யென்று தண்டமிழில் கேட்டவண்ணம் சாதித்துக் கண் தெரியா முத்து வயிரவப்புலவருக்குக் கண் தெரியக் காட்சி கொடுத்தவன் நீயல்லவா? முருகப்பெருமான் உன் வேண்டுகோளை மறுக்கமாட்டான். இதனை, அனைவரும் அறிவர். தானே தயவுடைய சண்முகனிடத்தில் உன் போன்ற அன்பர்களும், என் குறையை விண்ணப்பித்தால் அருள் செயேன் என்பானோ? அடியாரைத் தத்தளிக்க விடச் சகிப்பானோ? மாயையின் மகனாகிய சூரனுக்கும், தன் பேருருவைக் காட்டியவன், நேயருக்குக் காட்சி நல்கானோ? மாயைக் கொடுமைகளைக் களைய வல்ல இறைவன் என் பாசக்களையையும் களைய வல்லவன் அலனோ? வீரம் பேசி இகழும் புலவர்பாலும், துன்புறுத்தி இன்கவி கொள்ளுமவன், அன்போடு யான் பாடும் தமிழ் மாலைகளையும் இன்போடு தன் தோளில் ஏலானோ? "குழ றிக்குழறிக் குமரனைப் பாடு" என்கிற பழமொழியுங் காயாவது தருமா? நீ கூறினால், முருகன் என்னையும் தள் ளாது ஏற்றுக் கொள்ளுவான். இதில் ஐயம் கொள்ளேல். அவன் முன்னர், நீ, உருவக தாளத்தில் ஆடினால், அவன் உருவை அகத்தில் நான் உன்னுவதை உணர்வான். ஆதி தாளத்தில் ஆடினால், நீ துணையாதி என நான் வேண் டுவதை அறிவான். சம்பை தாளத்தில் ஆடினால், நான் சனனப் பையில் வாராதபடி அருளுவான். திரிபுடை தாளத்தில் ஆடினால், மாயையால் வருந் திரிபு உடைய

மகிமைமாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே
உபயசீதள பங்கய மென்கழல் தருவாயே.

அருள் செய்வான். மட்டிம தாளத்தில் ஆடினால், மட்டிமையை நீக்கிச் சிட்டர் குழுவிலே சேர்ப்பான். துருவ தாளத்தில் ஆடினால், குருவாகி வந்து, தொல்லை வினை தீர்த்துப் பெரிய நிலையில் வைத்து ஆதரித்து எம்மை வாழ்விப்பான். ஆதலால் நீ முதலில் சண்முகன் முன் சந்தமொடு நடித்து, அவனை மகிழ்வித்து, நல்ல சமயம் வாய்த்து, என் குறையை வித்தகமாய் விளம்புக.

நன்றி மறவேனெனத் தொண்டன் நவிலல்:—

அவ்வாறு விளம்பினால், சிவந்த சிறிய காலையும், விரிந்த பசிய தோகையையும் உடைய மயிலேறே! இவ் உதவியை என்றும் என் நெஞ்சில் நன்றாய் நினைவேன். சமயத்தில் உயிருதவி செய்தவர்களை உயிர் உள்ளளவும் போற்றுவது மேலோர் மரபு. உன்னைப் புகழ்ந்து, அண்ணாமலைப் புலவர் (அருணகிரிநாதர்) பாடியருளிய **மயில் விருத்தம்** பாடுவேன். "**ஆதவனும் புலியும்**" என்ற திருவகுப்புப் பாடி மகிழ்ந்தாடுவேன். "**வண்ணச்சரபம்**" முருகதாசர் சொன்ன **மயிலலங்காரம்** சொல்லி, மனமுருகி உன்னைப் புகழ்வேன். **பரிபூரணானந்தபோதம்** பகர்ந்த பரிபூரணானந்த கடல் போன்றவரும், **தகராலய இரகசியம்** சொன்ன முழு ஞானியும், முருகனுக்கே தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவரும், அகவிருளை நீக்கும் சித்தானந்தபானுவாகிய **குமர குருதாசர்** (பாம்பன் சுவாமிகள்) உன்னைப் புகழ்ந்து கூறியதும், தீந்தமிழ்ச்சால நிறைந்ததாவும், "கன்மனமும் நீராக்கும் கற்கண்டினைப் பழிக்கும்" **பொன்மயிலின் கண்ணி** சொல்லிப் போற்றுவேன். "கன்மவினைக் கட்டறுக்கும்

செந்தில் வாழ் செந்தமிழ் பெருமானே
தொண்டினால் ஒன்று உரைக்க அருள்வாயே.

ஞானக் கதிர் வேற்பெருமாற்குத் திட்டமுற என் கருத்தைச் செப்புவாய்.'' பல்லுயிர்க்கும் நல்லுயிரா யிருக்கும் அப்பரம்பொருளுக்கு யான்விரித்துச் சொல்லுவது என்ன? என் உள்ளத்திலிருந்தும், தன்னை ஒளித்த பெருங்கள்வனுக்கு அறிவிலேன் சொல்லுவது யாது?

தொண்டன் தன் குறைசொல்லி விடுத்தல்:—

எனினும், வாழையடி வாழையாக, உனக்கு வழியடிமைசெய்யும் ஏழைத் தொழும்பன் ஒருவனுளன். அறியாமையால் அவன் பிற குற்றம் ஒரு கோடி செய்தாலும், உன்திருவடிக்கு ஒரு குற்றமும் செய்ய நினையான்.

"உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலான். பின்னை யொருவரையும் பின் செல்லான். உன்னடியார் பொன்னடிகட் கென்றும் பிழை செய்யான். அன்னவர்கள் சொன்ன பணிபுரியச் சோர்வடையான்'' பரம்பொருளும் பல்லுயிரும், இருவினையும், அவற்றிற் கேற்ற கதிவகைகளும் இல்லை என்பார் கூட்டத்தில் கால் வைக்கமாட்டான். சரியை முதலியவற்றை இகழும் குறும்பர்கள் கூட்டத்தைக் கூடான். மனையைப், பொன்னை, மணியினைப், பெண்கள் கூட்டுறவைச், சோற்றைத், துணியை, அணிகலனை, எனதெனதெனறுத் தேடித்திரிந்து, திரட்டிச் சேர்த்து வைத்து அலைகின்ற சிலர் "நாம்பிரமம்'' என்று மார்தட்டிக் கொள்வார். அக்கேடர் மொழி கொள்ளான். "ஏகம், துவிதம்'' என்று வாது செய்வாரோடு இணங்கான். பொய்ஞ்ஞானம் பேசுவோரை விரும்பான். வஞ்சனையால் தன்னை மறைத்த ஆணவ இருளும, வினைத்தளையும் நீங்கி,

---

தண்டைசூழ் கிண்கிணிப் புண்டரீகந்தனைத்
தந்துநீ அன்புவைத்து அருள்வாயே

மாயைப் பேயைத் தூரத்தி, பேசா அநுபூதி பொருந்தப் பெரிதும் விரும்பினான். "நீயான ஞான விநோத நலமே விரும்பினான்." அவனது குறை தவிர்த்தாளல் உன் கடன் காண்.

எளியார்மேல் மிகுந்த கருணை உடையோனே, அவ்வடியான்பாலுள்ள எத்தீங்கையும் ஒரு பொருட்டாகக் கருதேல். "இங்கே வா! நீ என் அடிமை" என்று சொல்லி அவனை ஆட் கொண்டு உன் பொன்னடிகளை அவன் சென்னிக்கு பூவாக ஆக்குக. பழவினைக்குற்றம் நீக்குக. மெய்ஞ்ஞானம் ஆக்குக. எனது, யான் என்னும் செறுக்கைக் களைக. உன்னையே, உணர்ந்துணர்ந்து, தத்துவமெல்லாம் ஒடுக்கி, மெய்யின்பம் புணர்ந்து, அதினின்று நீங்காமல், தாடலைபோல் நீங்காத சுத்தாத்துவித அநுபவத்தில் நிலை நிறுத்துக. பொன், மாடு, மனை, மக்கள் முதலியவற்றினும், ஏனைய வாழ்வினும் மயங்காமலும், கேடு விளைவிக்கும் வறுமை அவனை அணுகாமலும் காமக் குழியில் வீழ்ந்து ஆழாமலும், தீந்தமிழ்ப் பாவினை விற்றுத் திரியாமலும், உனது புகழ் கூறும் நூலன்றிப் புன்னூல் ஓதிப் பொழுது போக்காமலும், அன்புமிக்க ஜெபம், திருவடித்தியானம, முதலாகிய நலங்களை எல்லாம் விரைவிற் பெறவும், நீ வந்து வரமருளி, எல்லையில்லாப் பேரானநத வீடும் அவனுக்கு அருள் புரிக. "ஆனந்த உருவனாகிய முருகையனே! சத்தே! சித்தே! ஓம், சதா சிவனே !" என்று சொல்லி, சித்தேசனுடைய நல்லருளை எனக்குச் சேர்ப்பிக்க. தோகைக் குடையை விரித்து, நிழல் பரப்பி, வள்ளி தெய்வயானை ஆகிய அன்னையர்கள் இரு

செந்தி நகர் வாழுமரு மைத்தேவர் பெருமானே
வந்தடிமையாள இனி எப்போது நினைவாயே

பக்கத்திலும் பொருந்த, வெற்றிமாலை புனைந்த, ஞானவடி வேல் வலக்கையிலே ஏந்திய முருகேசனை, ஞானப்பால் பரிமளிக்கும் வாயனை, பரம குருநாதனைத், தேவர்கோவை, வரதனை, அன்பரை வாழச் செய்யும் விரதனை, மாணிக்க வண்ணனைப், பவளத் திரளை, ஆணிப் பொன்னைப் பெருஞ் சோதியை, அடியார்களின் பிறப்பிறப்புக் கடல் கடக்க அருளும் தோணியை, முத்தியின்பம் துய்க்க ஏற்றும் ஏணியை, அன்பர்க்கு இரு நிதியை, ஆரமுதை, முக்கட் கரும்பில் எழுந்த இனிய சாற்றினை, வேத மரத்தில் விளைந்த நறுந்தேனை, மெய்ஞானத்தீங்கனியை, ஒளிபொருந் திய அயில் வேலேந்திய, அருள் நிறைந்த பழனி ஆண்ட வனை என்பால் மயிலேல் விரைவில் அழைத்து வருக.

முற்றிற்று

பச்சை மயில் தூதொன்று பாரோர் புகழும்வகை
செச்சையணி வேலவனார் சேவடிக்கே—இச்சைகொளும்
கோவை நடேசகவிக்குஞ்சரஞ் செய்தானன்பாய்
நாவைவிடாத் தேனூர நன்கு.
சம்பந்தன் பிரியோன், சதா கவிபயில்வோன்
கம்பன்போல் கவியால் நம்பந்தமறுப்போன்
வம்மின் எனக்கூவி பழனியாண்டி—சம்
பந்தத்தினை நாட்டும், நடேசன் கவி நன்கு ஓங்கவே,

கந்தர் கலிவெண்பா

ரசபதி

திருமார்பு.

குவிந்து அரும்பிய இளங் குஜங்கள்; வளமாகச் சிவந்த வாய். இளங்கொடி போல் துவளும் இடை, இந்த

அலைவாயுகந்த பெருமானே, குறை தீரவந்து குறுகாயோ
மாமணி நூபுர சீதள தாள் மணி வாழ்வுற எவதும் ஒருநாளே.

இயல் பல நிரம்பிய மாதர் எண்ணிறந்தோர். அவர்களுள், உள் முகமாகக் குமரனைத் தழுவும் உணர்வுடையவரும் சிலர் உளர். முருகனை நினைத்து மோகம் மூளும் அவர்கள், தம் தாபம் தணியத் தழுவும் பரந்த மார்பினன் அந்தப் பரன்:

நவமணி பதித்த பொன்னாபரணங்கள், அந்த அகன்ற மார்பில் அமைந்து அழகு பெறுகின்றன. அத்திருமார் பில் ஊசலாடும் பொன்னாலான பூணூலும், உருத்திராட்ச மாலையும் எவர்க்கும் வேட்கையை யெழுப்புகின்றன என்று பக்தி பரவசத்தோடு பாடிக் கொண்டே போகிறார் கவிவரர்: இதோ பாருங்கள், அவர் பாடுவதை!

'முதிராத
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையர் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் - பைம்பொன்
புரிநூலும் கண்டிகையும்'

[முதிராத - முதிர்தல் இல்லாத; இளமையான. கும்பம் - குடம் போன்ற. வேட்டு - காதல் முதிர்ந்து. பைம்பொன் - (மாற்று அறிய இயலாத) பசுமையையுடைய பொன். புரிநூல் - முந்நூல்; கண்டிகை - உருத்திராக்க மாலை.)

திரு இடை

அழகிய பட்டாடை; அரைஞாண்; அரைக்கச்சை முதலிய தரித்த இடுப்பு, நெடுஞ்செல்வ மிடுக்கை நினைவு றுத்துகின்றது. அந்த இடையைத் 'திரு அரை' என்ற சொல்லால் அறிமுகப் படுத்துகின்றார் முனிவர்.

அஞ்சும் இமயவரை அஞ்சல் என்ற பெருமானே
மலரடி வணங்க என்று பெறுவேனே.

'பூம்பட்டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும் - திருவரையும்'

(பூம்பட்டு - மிருதுவான பட்டு. ஞாண் - இடையில் இருக்கும் ஒருவகை அணி.)

திருவடிகள்

இதோ மற்றுமொரு அற்புதம்! ஞான சூர்யோதயத்தை நினைவுறுத்தும் அருள்நாதம் விமல முருகனது வீரக் கழலி லிருந்து வெளியாகின்றது.

பொன்னாலான கிண் கிணி யென்னும் பூஷணங்கள், கிண்கிண் கிண் கிண் எனும் தமது இனிய ஒலியால், முருகன் பரத்வ நிர்ணயத்தைப் பறையறைகின்றன.

கலந்த பிறவித்துயர் கழிய, கலந்து கொளுங்கள்; திருவடி நிழலில் கலந்து கொளுங்கள் எனும் பொருளில், கலகல கல என்று சிலம்புகள் ஒலி செய்கின்றன.

'நாதக் கழலும் நகுமணிப்பொன் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும்'

(நகுமணி - ஒளிவிடு மணிகளை யுள்ளிட்ட - பரிபுரம் - சிலம்பு)

கழலும், கிண்கிணியும், கவினுறு சிலம்பும், தம் தோற்றத்தாலும் ஒலியாலும், காண்பார் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து கொள்கின்றன.

'நாதப் பறையினர் - நாதர் இந்நாதனார் அன்னே எனும்' என்கிறார் மணிவாசகனார்.

அந்த மறலியொடு உகந்த மனிதன் நமது
தன்பன் என மொழிய வருவாயே.

'கிண்கிரி கிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையில் கிண்கிணி ஓசை பதினாலுலகமும் கேட்டதுவே'; 'கிண்கிண ஓசைபட ....தேவர் பயங்கெட்டதே', என்றார் அருணை முனிவர்;

'கால் சிலம்பு - கலத்தலை உணர்த்து மாபோல கல கலகல என்றார்ப்ப' இருந்தது என்கிறார், தணிகைபுரா ணக் கச்சியப்ப முனிவர்.

கழலின் நாதம்; கிண்கிணிக் கிளர்ச்சி; சிலம்பின் சிறப்பொலி எனும் இம் மூன்றையும் குமரகுருபரர் போல் உணர்ந்தவர்கள் இப்பெருமக்கள் என்பதை, அவர் களது பாடல்களே நமக்கு அறிவிக்கின்றன. இந்த ஆபர ணங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு தத்துவ நுட்பங்கள் என்பதையும், நாம் இங்கு நினைவு கொளல் வேண்டும்.

மூல உருவம்

அளவிலா சூரியர்கள் ஒன்று கூடினால் எப்படி யிருக் குமோ அப்படி யிருக்கிறது பேரொளி மயமான திருமேனி. வளம் நிறைந்த அத்தெய்வத் திருவுருவைப் பார்த்து, ஆன் மா தன்பசி யாறுகின்றது. கண்களால் காண இயலாத களங்கமற்ற அத்தெய்வ ஒளியை, கள்ளமகன்ற உள்ளங் காண்கிறது; கண்டு கண்டு களிக்கின்றது.

கண்டதும் காதல் மண்டுகின்றது; காதல் கனிந்த உயி ருள், தன்னைக் காட்டும் உயிராகின்றது அந்த அருளொ ளித் திருவுருவம்.

நோய் கலந்த வாழ்வுருமல் நீ கலந்துளாகுஞான
நூலடங்க வோதவாழ்வு தருவாயே.

கனிவுமிகும் அவ்வொளியால், தம்மையிழந்த காதலர் அன்பர் என்ற பெயர் பெறுவர். அவர்கள் உள்ளம் மலரும் கமலமென மணஞ் செய்கின்றது. அந்த உள்ளக் கமலத்தில் ஒரு தெய்வ ஒளி விளக்கு; அத்தீபந்தான் குமர தெய்வம். முருகப் பெருமானது மூலவடிவம் இருந்த வண்ணம் இவ் வண்ணம்.

'சோதி
இளம்பரிதி நூறு யிரங்கோடி போல
வளம்தரும் தெய்வீக வடிவும் - உளமதனில் கண்டு;
ஆதரிப்போர்க்(கு)ஆருயிராய்;அன்பர்அகத்தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே'

(பரிதி - சூரியன். நூறுயிரம் - லட்சம். ஆதரிப்போர் - காதலிப்பவர். அகத்தாமரை - உள்ளக் கமலம்.)

காண நின்று, காதல் எழுப்பி, உயிருள் உயிராய்க் கலந்து பிரகாசிக்கும் கந்தப் பரமன் கருணைத் திறத்தைக் கனிந்து கூறும் இப்பகுதியை, பாடி மகிழாத மனமே பாழறை.

'பொதிய முனியகத்துப் பொங்கும் இருள் விலக்க
விதியும் அறியா விளக்கேற்றும் தேசிகனே'

என்று திருப்போரூர்ச் சிதம்பர முனிவரும்'

'ஆபத்தை நீக்கி வளர்த்தே - சற்றும்
அசையாமல் அவியாமல் அடியேன் உளத்தே
தீபத்தை வைத்தது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திகழ்நட ஜோதி
ஜோதியுட் ஜோதியுட் ஜோதி'

செயங்கொடண்ணக்குக சிவமலை மருவிய பெருமானே
தழைந்த நயனமும் இருமலர் சரணமும் மறவேனே.

என்று பாடும் அருட்பிரகாசரும், இங்ஙனம் தெய்வ அனுபவம் கண்டு காதலித்தவர்கள் என்பதை, காட்டுகின்றன அவர்கள்தம் கவிகள்.

'போதரே என்று சொல்லிப் புந்தியுட் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த அழகன்'

என்று பாடும் தொண்டரடிப் பொடி யாழ்வாரும் இங்கு நம் நினைவிற்கு வருகிறார், இப்பகுதிகள், என்று அப்பேறு நமக்கு என்று நம்மை எண்ணுமாறு செய்கின்றன அல்லவா!

முதலுருவம்

வட்ட வடிவான தீபம், விந்து தத்துவம் என்ற பெயரால் விளங்குகின்றது; தீப நடுவில், நாதம் திகழ்கிறது; அந்த நாத நடுவில், அமைகின்றது அகரம்; உதிக்கின்றது உகரம்; மன்னுகின்றது மகரம்.

அகரமாக எழுந்து உகரமாகக் குவிந்து, மகரமாக ஒடுங்கும் அந்த நாத கீதத்தில் பிறக்கின்றது இனிய நயம்.

அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் எனும் ஐந்தும், ஓங்காரத்தின் உள்ளீடான ஐந்து அமைப்புகள்.

என்ன அதிசயம்!

நாத ஜோதியிலிருந்து வெளியாகின்றார் சதாசிவர். விந்து ஒளியிலிருந்து விளங்குகின்றார் மகேச்வரர். அகர ஒளியில் பிரசன்னராகின்றார் பிரமதேவர். உகர ஒளியிலிருந்து திருமால் உதயமாகின்றார். மகர ஒளியிலிருந்து உருத்திரர் மலர்கின்றார். இந்த ஐவரும், அருளல்,

---

பழநிச்சிவகிரி மீதினிலேவளர் பெருமானே
கருணைப் படியெனை யாளவு மேயருள் தரவேணும்.

மறைத்தல், படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மேதகு தொழில்களை மேற் கொண்டுளர்.

பிரார்த்தனை

ஓங்காரத்துள் ஐந்து ஒளியுளது. அவ்வொளிக்குள் ஒளியானாய்! அற்புத அந்த. ஒளியிலிருந்து ஐவரைத் தோற்றுவித்தாய்! அவர்களைத் தொழிற் படுத்தினை! தோன்றிய அவர்களிலும், அவர்கள் செய் தொழில் களிலும், தானே யாகித் தோன்றுகின்றாய்! இந்நிலையில், எங்கும், எவரினும், எதனிலும் நீங்காமல், நிறைந்த பெருமையுடைய, பெரிய திருவுருவாய் நின்றவனே அடியேற்கு முன்னின்றருள் என்று உணர்வால், வீறிட்ட ழைக்கின்றார் நம் விமல முனிவர் இதோ கேட்கிறது அவர் குரல்! சிந்தனையொடு கேளுங்கள்!

'ஓதிய ஐந்து
ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய்
ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே'

ஆஹா! குமர குருபரர் குமரனை உளம் நெகிழ்ந்து அழைக்கும் இந்த இரண்டடிகளில், எவ்வளவு செய்திகள் அடங்கி யிருக்கின்றன. அநுபவக் கண்ணொடு இவைகளை ஓதும் முனிவர், கலைநிலை யமைந்த இந்த உலக நிலையில், உணர்வு ஒன்றியிரார் என்பது எவரும் அறிந்த உண்மை. இவைகளின் பொருளை விரித்தெழுத ஏடுதான் இடந்தருமோ? விவரிக்க, சொற்கள்தான்

செறிவு மறிவு முறவு மனைய திகழு மடிகள் தரவேணும்
அருள தருவியெனையு முனதோடடிமை கொளவும் வரவேணும்.

உலகில் இருக்கின்றனவேயோ என்று எண்ணாது எண்ணு கின்றது நம் மனம்.

படைத்த பிறவிப் பயனடைய, பாடல் முழுதும் சேர்த்துப் படிப்பம்.

"முதிராத
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் - பைம்பொன்
புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை யழகும் - திருவரையும்
நாதக் கழலும் நகுமணிப்பொன் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும் - சோதி
இளம்பரிதி நூறு யிரங்கோடி போல
வளர்தரு தெய்வீக வடிவும் - உளந்தனிற்கண்(டு)
ஆதரிப்போர்க்(கு) ஆருயிராய்; அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே ஓதியஐந்(து)
ஓங்காரத் (து) உள்ளொளிக்கும் உள்ளொளியாய்
ஐந் தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே!"

மூலத் திருவுருவும், முதலுருவும் செய்கின்ற அற்புதங்களை ஒருவாறு கண்டோம். இனி வழி உருவும், சார்புத் திருவுருவும் செய்கின்ற கருணை விலாசங்களை அடுத்த இதழிற் காண்பம்!

மலசலசு வாச சஞ்ச லமதாலென்
மதி நிலை கெடாமல் உன்றன் அருள்தாராய்

ஆறுமுகமான பொருள் - (3)

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

உள்ளத்தை ஒரு வழிப் படுத்த முருகவேளது திரு நாமங்களுள் ஒன்றை ஆசான் உபதேசப்படி செபிப்பது ஒரு முறை. அத்தகைய செபத்திற்குப் பயன்படும் மந்திரம் ஆறெழுத்தால் ஆனது சிறப்பு. அதனால் 'அண்ணலார் பெயர் ஆறக்கரங்களே' என்பர் பாம்பனடிகள். இவ் வாறெழுத்துச் செபம், முத்திதரும்; முழுப் பலன் நல்கும்.

"பத்தியு ஞானமும் பரவிடு மார்க்கம்
எத்தனையோ வகை இருக்கினுமிகத்தில்
முத்தி தந்தனுதின முழுப்பலன் நல்கச்
சத்தியமாவது **சரவணபவவே**"

(பாம்பனடிகள்)

இத்திருவாறெழுத்துக்களே பீடமான அறுகோணச் சக்கரத்தில் முருகன் அமர்ந்துள்ளதாகவும் கூறுவதுண்டு.

"ஷட்கோண மத்ய நிலயாய நம:"

(சகச்சிரநாமம்)

"**ஷடுமையில்** நடுவுற அழகினுடன மரும்
அரஹர **சரவணப்** - பெருமாளே"

(திருப்புகழ்)

இது சகராதி ஆறு—சரவணபவ என்பதாம். வேறு வகையாகவும் கூறுவாருளர். முருகனடியர்க்கு இச் செபத்துக்கு மேல் வேறு வேண்டுவதில்லை.

**அகில புவனுதி யெங்கும் வெளியுற மெய்ஞ்ஞான இன்ப
அமுதை யொழி யாதருந்த அருள்வாயே.**

"காறு கெட்ட கந்தனல்
ஊறறுக்க வுள்ள நீ
வேறெழுத்தை வெஃகுறேல்
ஆறெழுத்தை அன்றியே" (பாம்பனடிகள்)

இத்திரு ஆறெழுத்தை 'இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும், இளமகளிர்க் கலவிதனிலே மூழ்கி ஆழுகினும், இடரினும் தளரினும், நோய் தொடரினும் வழுக்கி வீழினும், இருமினும், தும்மினும் செபிக்கும், நாப் பழக்கம் அவசியமாகும்.

"தனி நிலைச் சுகனே உனை மறக்கினும்
நா சாற்றிடும் சரவணபவவே" (திருவலங்கல்)

என்றபடி செபிக்கத்தக்க மந்திரத்தை வெளிப்படுத்தவே முருகன் ஆறெழுத்துக்களையே ஆறுமுகமாக்கிக் கொண்டான். இந்த ஆறெழுத்துக்கள் பிரணவத்தோடு சேர்ந்த பஞ்சாட்சரமே என்றும் கூறுவர்.

அதன்படி முருகனது ஆறுமுகங்களுள் ஒரு முகம் குடிலை.

"ஓமெனப்படும் குடிலையே ஒப்பிலா முருகன்
மா முகத்திலொன்றும்" (கந்தபுராணம்)

எனவே ஸ்ரீ பஞ்சாட்சரமும் பிரணவமும் கூட்ட ஆறெழுத்தாகும். ஐம்முகச் சிவத்தின் அறுபதமே ஆறு முகச் சிவத்தின் ஆறெழுத்தாம்.

"நன்முக மிரு மூன்றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முகமாகி உற்ற தாரகப் பிரமமாகி

அதிர வரற்று கோழியும் அடியர் வருத்தி வாழ் வுறும்
அபிநய பத்ம பாதமு மறவேனே

முன் மொழிகின்ற நாதம் மூவிரண்டெழுத்து மொன்றாய்
உன் மகன் நாமத்து ஓர் ஆறெழுத்தென உற்ற அன்றே''
(கந்தபுராணம்)

முப்பிரணவத்தையும் கூட்டியுள்ள மூலப் பிரணவத்தோடு சேர்ந்த ஐந்தெழுத்தும் ஆறெழுத்தாகும். இதனைத் 'திரணிரை அறுபத முரல்வன' என்ற திருவாசகத் திருப்பள்ளி எழுச்சி அடிகளுக்கு உரை எழுதுகையில் திரு. போப்பையர் (Rev. G. U. Pope) அவர்கள் "This passage is a curious double entendre. It may also be rendered:— the vast assembled host sing the six syllables om-ci-va-ya,-na-mah (ஓம் சிவாய நம)'' எனக் கூறி ஐந்தெழுத்து (அறுபதம்) ஆறெழுத்தான வகையைக் கூறுவது காண்க.

இது காறும் கூறியதால் ஆறெழுத்து ஆண்டவன் என்பது ஆறுமுகமான பொருள் என்று அறிகிறோம்.

"ஐந்துவகைப் படுபூத இயல்பினைக் கொண்டு
அளவில் உலகாக்கி வாங்க
ஐந்து முகத்துடன் விளங்கி ஐந்தெழுத்தினுருவாகி
அவற்றோடுள்ள
பந்தமொன்று சால் குடிலை அருவமுக மேன்பதையும்
பரித்தே மஞ்ஞை
உந்தும் அறுமுகனை ஆறெழுத்துக் கிறையே
என் உறுவல் தீராய்.
(திருத் தொடையல்)

பிழையே பொறுத்துன் இருதாளி னுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே.

"ஷடக்ஷரபதயே நமோ நம: BESANT
ஷட் கோண பதயே நமோ நம:"

(குமாரஸ்தவம்)

குறிப்பு:— ஷட் + அக்ஷரம் = ஷடக்ஷரம் என்பதே சரி. ஷடா க்ஷரம் என்னல் வழக்கத்தில் வந்த வழு என்க.

ஸ்ரீ அருணகிரி அநுபூதி

(ஸ்ரீ வத்ஸன்)

ஆக்கின்ற பரிசத்தால் கொசுவிறந்துதையா
ஆச்சரியம் ரூபத்தால் விட்டிலிறந்துதையா
பார்க்கின்ற மணி யொலியால் மானிறந்துதையா
பாழான வுரிசையினால் மீனிறந்துதையா
தாக்கினின்ற கெந்தியினு லெரும்பு சென்று
சாதகமாய் மாண்டு திந்த வைந்தும் பாரு
பாக்கின்ற இந்திரிய விடையத்துள்ளே
பாழான மனஞ் சிக்கிப் படுகுவாரே.

(கைலாய சட்டமுனி ஞானம்)

1. **பரிசம்:** *கொசு மிகவும் சிறிய ஜந்து. அழுக்கில் உற்பத்தியாகிறது. இது அழுக்கிலேயே வாழலாம். ஆனால் மற்ற ஜந்துக்களின் மேல் உட்காருவதில்தான் இதற்கு அதிக விருப்பமாம். அப்படி உட்காரும் போது துடைக்கப்படுவதின் மூலம் உடனேயே மாண்டு விடுகிறது. இதைத் தவிர்த்துக் கொள்ளலா மன்றோ?*

இடைவிடா தெடுத்த பிறவி வேரறுத்து
உன் இணையடி அளிப்பது ஒரு நாளே.

2. ரூபம் : விட்டில் பூச்சிக்கும் விளக்கிற்கும் யாது சம்பந்தம். எரிகிற தீபம் அதற்கு ஓர் உணவு அல்ல. இருந்தும், அவ்விளக்கினைக் கண்டதும் அதற்கு ஓர் ஆனந்தம் ஏற்படுமாம். ஆனந்த மேலிட்டால் சும்மாவிருக்கலாம். ஆனால் அது பறந்து போய் விளக்கின் மேல் விழுகிறது: அதனால் தன் உயிரை இழக்க நேருகிறது இதைத் தவிர்த்துக் கொள்ளலாமன்றோ?

3. ஒலி : சப்தம் : காட்டில் வாழும் மான்கள், மற்ற புலி கரடி நாய்கள் போல மோப்பம் பிடிப்பதன் மூலம் இரை தேட வெளி வருவதில்லையாம். ஏதாகிலும் ஓர் அரவம் அல்லது சப்தம் ஏற்படில், இயற்கையில் புதரினுள் வாழும் அவைகள் வெளி வந்து நோக்குமாம். அஃதினையறிந்த மற்ற மிருகங்களோ, என் வேட்டையாடுபவர்கள் கூட மணியடித்து, அப்போது அவ்வொலி கேட்டு வெளி வரும் மான்களைச் சுட்டுக் கொல்லுவது இயற்கையாம். இவ் வொலியில் மயங்கி வெளி வராமல் புதரினுள்ளிருந்தே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாமன்றோ?

4. ருசி: மீன்கள் ஜலத்தில் வாழ்கின்றன. அடிபாகத்திலுள்ள சேற்றில் அவற்றிற்கான உணவுகளும் கிடைக்கின்றன. இருந்தும் தூண்டிலில் காணப்படும் புதிய ஓர் உணவில் ஏற்படும் உருசியினால் தூண்டிலில் சிக்கி உயிரை இழக்கின்றன. மற்றும் ஆறுகள் குளங்கள் கரையோரங்களில் உணவு நிமித்தம் வரும்போது வலையில் சிக்கி மாள்கின்றன. இவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாமன்றோ?

அவசமாகி யுருகு தொண்டருடன தாகி விளையு மன்பி
னடிமையாகு முறைமை யொன்றை அருள்வாயே.

5. வாசனை : எறும்பிற்குக் கண்கள் இல்லையாம். அவற்றிற்கான உணவுகள் எந்தப் பெட்டியிலோ, மறைவிடத்திலோ வைக்கப்பட்டிருப்பினும், வாசனையினால் மோந்து சடுதியிலே அதை யடைகின்றது. பார்வையில்லாததனால் அதற்கு ஏற்படும் ஆபத்துக்களை அறிய முடிவதில்லை. வாசனையிலுள்ள மோகத்தினால் தன் உயிரை இழக்க நேருகிறது. இதைத் தவிர்த்துக் கொள்ளலாமன்றோ?

எப்படி இந்த ஐந்து வித இந்திரியங்களின் மேல் ஏற்படும் ஆசையினால் மேலே காணப்பட்ட ஜந்துக்கள் தத்தம் உயிரையும் இழக்க நேருகிறதோ, அவ்வாறே மானிடர்களும், இந்திரிய விஷயத்துள் சிக்கி உயிரை மாய்த்துக் கொள்ளாதீர்கள். அறிவினால் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து உணர்ந்து வாழுங்கள். அவ்வாறான வாழ்வு எனக்கு ஏற்படட்டும்; அத்தகைய ஐந்து வித இந்திரிய விஷயங்களில் சிக்கி நான் பாழாகாமல் ஐந்து வித அபயத்தை அளிப்பாயாக உனது ஐங்கரத்தால், என்று, அருணகிரியார், நெஞ்சக் கனகல்லு என்னும் காப்புச் செய்யுளில் ஐந்து கரத்தனை என்ற சொற்களால் தெரியப் படுத்துகிறார்.

நெஞ்சிலுள்ள நஞ்சையகற்றி, நெக்குருகி, வாழ்விக்கும் சொற்களால் அடுத்தடுத்து, ஹே முருகபிரானே, உம்மை நான் வணங்குவேனாக. எனது உடல், பொருள், ஆவியாலாகிய யாவற்றையும் உம்மிடம் ஒப்புவித்து உம்மைத் தஞ்சம் என்று அடைவேனாக. அடைந்த எம் போன்றவரைக் காப்பதே உமது தொழிலன்றோ? உமது ஐந்து

திருமகள் மருவிய திரங்புய அறுமுக
தேசிகனை பெற அருள் புரிவாயே.

வித அபயம் அளிப்பதன் மூலம் நான் இந்திரிய விஷயத் துள் சிக்காமல் வாழ்வேனாக. உமது பாதங்களில் பன் முறை பணிகிறேன், பணிகிறேன், என்று எவ்வளவு கனிவு, இரக்கம், தாபத்துடன் இச் செய்யுளை அருணகிரிப் பெருந்தகையார் பாடியுள்ளார்! (மற்றும் விளக்கப் பெருகும்)

இத்துணை அரிய கருத்துக்கள் அமைந்த இக் காப்புச் செய்யுளை இயற்றிய பெருமை அருணகிரியாரையே சார்ந்தது.

முருகனடிகளே சரணம்

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

19 ஆம் பை

V. S. வேங்கடராமன்

"பகவானது பிரதிமையும் பகவானும்."

அகன் என்ற மலைப் பாம்பசுரன் வாயினின்று மரித்த கன்றுகளையும் அவ்வளவு நண்பரையும், பார்வையினால் உயிர் பெறச் செய்த கண்ணன் செயல் படைத் தோனுக்கே வியப்பு ஊட்டினது. இந்த அகாசுரன் மோக்ஷம் அடைந்ததை வானத்திலிருந்து கண்ட பிரமனுக்கு வியப்பினும் வியப்பு மேலிட்டது, தந்தையின் அருஞ் செயல், மகனுக்குப் பெருவியப்பூட்டுவது இயல்பே யல்லவோ.

பகவானது பிரதிமை, திருவடி முதல் திருமுடி வரை ஒரேதடவை வலியவே மனத்தில் நிறுத்தப் பட்ட

எடுத்த பொய்க் கடத்தினைப் பொறுக்குமிப் பிறப்பறுத்து
எனக்கு நீந்த முத்தியைத் தர வேணும்

போதேயே திருவனுக்கத் தொண்டராம் நித்ய சூரிகளுடைய பதவியைத் தரும் போது, அப் பகவானே அம்மலைப் பாம்பசுரன் வயிற்றினுள் நுழைந்து வெளிவர அவ்வசுரன் மோக்ஷம் அடையாது போவனு? அத்தகைய **பாவிக்கும்** கண்ணன் திரு மேனி தீண்டலால் மோக்ஷம் கிடைத்ததே என்பதில் தான் பிரமனுக்கு **வியப்பினும் வியப்பு** மேலிட்டது.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே : பிரமன் மட்டுமல்ல, இந்திரன் முதலான தேவரும், முன்னெடுத்த பல அவதாரங்களிலும் காணப்பெறாத கண்ணனது மேலான மகிமையைக் கண்டதுமே வியந்தனர். ஆடினர், பாடினர், பிருந்தாவன கிருஷ்ணனைப் பின் தொடர்ந்தே வானத்தின் வழியில் பிரமாதி தேவர்களும் கூடவே நடந்தார்கள்.

“ஆற்றங்கரைச் சாப்பாடு அமிழ்தமன்றோ” கண்ணனுக்கு நண்பருடன் கூட்டுணவு கொள்வதில் விருப்பம் ஆகத் தோழரைப் பார்த்தார். வேளையோ நடுப்பகல், எல்லோரும் கட்டுச் சோற்று மூட்டையை அவிழுங்கள். நாம் சாப்பிடலாம். கன்றுகள் தண்ணீர் குடிக்கட்டும். புற்றரைகளில் மேயட்டும். அழகான மணற்றிட்டு இது, வாருங்கள் என்றார். எல்லோருங் கூடினர். கண்ணனைச் சுற்றிப் பல வரிசையாய் நெருக்கமாக அமர்ந்து உண்ணத் தொடங்கினார்கள்.

சிரிப்புடன் சந்தோஷமாய்ச் சாப்பிட வேண்டும் என்பது கண்ணன் திருவுள்ளமாதலால், சிரிக்கச் சிரிக்கப்

கடப் பலர் சேர்கின் கிணிப்ரபை வீசுங்
கழற்புணை நீதந்து அருள்வாயே

பேசிக் கொண்டே இடக்கையில் சர்க்கரைப் பொங்கலை வைத்துக் கொண்டும், புல்லாங்குழலை இடுப்பில் செருகியும், கொம்பும், பிரம்பும் ஆக இரண்டையும், இடக் கையக் குளில் இடுக்கிக் கொண்டும் தாமரைப் பூவின் கோட்டை போல யாருக்குமே நேராக நடுவில் நின்றும், தன் யோக மாயா பலத்தால், பல முகங்களைப் பல நண்பர்கள் கண் முன் ஒரே காலத்தில் காட்டி, ஒவ்வொரு நண்பரையும், "கண்ணன் என்னைத் தான் பார்க்கிறான், பிறர் முகத்தைப் பார்க்கவில்லை, என்னிடத்தில்தான் கண்ணனுக்குப் பிரேமை அதிகம்," என்று நினைக்கச் செய்தும் கண்ணன் சாப்பிடத் தொடங்கினர்.

"ஆயரோடுண்ணுதற்கு அவிசு உணவு ஈடோ" வானத்தில் கூடிய தேவர்கள், கண்ணனுக்கு ஆற்றங்கரை அமுதுண் விழா யாக ஹவிர்ப்பாக போஜனத்தைக் காட்டினும பிரியம் போலும் என்று பேசிக் கொண்டனர். தாமும் உண்பவராய் மகிழ்ந்தனர். சர்வாந்தர்யாமி கண்ணனன்றே.

மலரவன் மயக்கமும், திருட்டும், கண்ணனது கனிந்த அன்பும்: அவர்கள் உணவில் பாதி சாப்பிட்டு முடித்த போது, கன்றுகளெல்லாம், புல்மேய நடுக்காட்டினுள் நெடுந்தூரஞ் சென்றுவிடப் பயந்து போன நண்பரைப் பார்த்துக் கண்ணன் "தோழர்காள்! சாப்பாட்டை விட்டு விட்டுப் போகாதீர்கள். நானே போய் இங்கு கன்று களை ஓட்டிக் கொண்டு வருகிறேன். நீங்கள் தைரியமாகச் சாப்பிடுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பக்தகைங்கரியஞ்

கலைப் புல வோர்பண் படைநிட வோதுங்
கழற் புகழோதும் கலைதாராய்

செய்யத் தன் இடக் கையிலிருந்த சர்க்கரைப் பொங்கலோடேயே, மலைகளிலும், குகைகளிலும், கொடிப்புதர்களிலும், தன் கன்றுகளைத் தான் மட்டுமேயாகத் தேடிச் சென்றார்.

மகன் தந்தையினிடம் விளையாடுதலுமுண்டல்லவோ? பிரமன் பார்த்தான். கண்ணன் தனக்குத் தந்தைதானே. மாயக் கண்ணனது மகிமைப் பெருங்கடலின் அளவு காண ஆசைப்பட்டு அங்கு அவர்களது கன்றுகளை யெல்லாம், மறைத்து வேறிடத்தில் கொண்டு சேர்த்தார். இங்கு ஆற்றங்கரை மணற்றிட்டிலிருந்த ஆயர் குலக் குழந்தைகள் அத்தனையையும், மறைத்துக் கன்றுகளைக் கொண்டு போய் ஒளித்து வைத்த இடத்திலேயே சேர்த்து விட்டுத் தானும் மறைந்து விட்டார். பக்காத் திருடன் மகன் கொஞ்சமாவது திருட்டுத் தொழிலைக் காட்டாது போவானோ? மீன் குஞ்சுக்கு நீச்சல் கற்பிக்க வேண்டுமோ? (தொடரும்)

THE DAWN

The HOLY QUEST and the GREAT FIND have led to the DAWN of Life eternal. What a contrast from the night that has passed. All was doubt and tribulation. Clouds of thickening darkness passed in serried ranks through my mind. No seeing, no sight. Everyone of the senses was kept in the imagined horror of immediate dissolution. Was life created only as a prey to death? Egged on by a voice from within, I turned the quest without into a quest within, wherefrom came the still small message of hope. I

have seen the inner light. That has dispelled the darkness without; and all that was darkness before has now transformed itself into resplendent effulgence. The Lord is everywhere. He speaks through the throb of every life.

I have seen the dawn of many days that have set. But now I have stumbled on the dawn of the day everlasting. All glory to God. It is the dawn of this day that set the immanent Lord within to impinge on my consciousness. I am conscious of the great discovery. I realise. I feel. I have added to my experience the benefit of the light within. But it passes my understanding. It is beyond words. Man is first conscious before he understands. The consciousness of light within whets the understanding. The understanding that flows from consciousness is unable to measure or trace the depth of consciousness wherein dawned the eternal light.

The tamil saints have sung in sweet strains of poesy the DAWN of the ETERNAL DAY. The experience of the dawn has been the birthplace of song and poesy and the innumerable songs of devotion sung by the saints are the product of their divine experience. The Dance of Poesy brought forth the tunes known as *puns* (பண்கள்) and the poems of great literary value and of even greater spiritual value.

The dawn of the day everlasting finds its analogy with the dawn of the day of the world. *Saint Manikkavachakar* would fain attempt to rouse from sleep the Lord of his heart. Tiruppalli Ezhichi was then vouchsafed to the world.

But what of this idea of God sleeping and God awakening and saints going to the temples to awake the Lord. The Great Find has disclosed the Lord, the God as being OMINIPRESENT. In his state of ominipresence, HE is only immanent as compared with being manifest. Manifestation of God and the devotee's realisation of His manifestations have given the world scriptures, puranas, the spritual experiences recorded in the lives of saints —in fact the 64 *kalas* and all else that we see and recognise. God-conscious Manikkvachakar seeks to understand in part atleast the play of His grace. He seeks to rouse the immanence of the Divine state into the manifestation which means the play of His Grace perceptible to the limited senses and understanding of man. God is supposed to be asleep in His immanence and awake in His manifestation. He feels that he is in a crowd of devotees similar to himself who seek to awaken the Lord into acts of grace and inspiration. The Non-Form is appealed to, to *take form to bless and to inspire.*

Now comes the appeal which in its tenderness and feeling stands unique by itself. Sri Andal's Thiruppavai and Manikkavachakar's Thiruppalli Ezhuchi, two of the foremost invocations for the manifested mercy of the Lord, may well give us the samples of the rich experience of the saints. It is indeed difficult to select where almost every stanza is soul stirring. But for the interpenetration of the absolute into the separatism, and the possibility of expressing the joy of the saints in the analogy of the experiences of differentiated beings in the world and of the world, the ecstacy of the joy of the saints would have been lost to the unrealised world. The glory of the panorama of separateness in creation is linked with the one indivisible essence of the Divine Joy. Its expression has come out in song and verse. The brine holds the water and salt together. But neither the water nor the salt is lost to the other. Losing their separateness, each still enjoys the taste and touch of the other. Even so in the union with God, the Baktha and the Bhagavan still enjoy each other and nothing is so profound a proof of this experience as the appeal of the saints to the Lord to awake.

(*Thiruppugal Mani*)

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலே' நஞ்சன்கூடு

I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

I.D.L.71 பிமெலெக்ஸ் ரத்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரூல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்

"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
'பூனிகான்' சுத்த தேன்

ஸோல எஜெண்டுகள்
யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதராஸ்.1

"சாற்றுமுன் வாழ்வை
யெண்ணாதே — பிறர்
தாழும் படிக்குநீ
தாழ்வாகப் பண்ணாதே"
(கடுவெளிச் சித்தர்)

No.1506 அசோகா MILD SCENTED ASOKA ஷீகாய் நெ.1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு, சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்பு பெற்ற நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி - மதுரை.

Tel:--"FAITH' Estd:--1924 Phone:—113

வியாபாரக்குறி

N. K. M.

தங்கநாடா

நம நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—18
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras.